[7th March 1969

சரியாக இல்லை என்று கூறப்படுகிறது. ஆகையால் அங்கே சரியான பந்தோபஸ்து போட்டு உத்தியோகஸ்தர்களுக்குப் பாதுகாப்பு தரும் நிலையை அரசு உண்டாக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதிகாரிகளுக்குப் பந்தோபஸ்து நிச்சயமாகக் கொடுக்கப்படும். இப்படி மதுரையிலிருந்து தேனீ வழியாக உத்தமபாளையம், கம்பம், கடலூர் வழியாக கடத்தல் செய்யப்படுகிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து அதற்கான கண்காணிப்பு செய்யப்படுகிறது. கூடுதலான கண்காணிப்பு வேண்டுமானாலும் செய்யலாம்.

Movement of Millets

*148. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(*a*) whether there is any ban on the free movement, within the district, of the dry crops produced by the agriculturists in their lands for selling them; and

(*b*) the reason for launching a prosecution in Usilampatti Sub-Divisional Magistrate's Court against one Gurunathan, a resident of Aranmanaipudur of Koduvilarpatti village adjoining Theni in Madurai district, after seizing 40 bags of ragi from him?

புஞ்சை தானிய போக்குவரத்து

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளையும் புஞ்சை தானியங்களை ஜில்லாவுக்குள் எங்கும் கொண்டு போய் விற்க தடை இருக்கிறதா?

(இ) மதுரை மாவட்ட தேனீயை அடுத்த கொடுவிலார்பட்டி கிராமம் அரண்மனைபுதூர் என்னும் ஊர்வாசியான குருநாதன் என்பவரின் கேப்பை மூட்டை 40-ஐப் பிடித்து பறிமுதல் செய்து உசிலம்பட்டி எஸ். டி. எம். கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்ட காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) தற்போது இல்லை. 1956-ம் வருடத்திய சென்னை புஞ்சை தானியங்கள் போக்குவரத்து கட்டுப்பாடு உத்தரவு, 9—12—1966 அன்று செல்லுபடியற்றதாகி விட்டது.

(இ) 1966-ம் வருடத்திய சென்னை புஞ்சை தானியங்கள் போக்குவரத்து கட்டுப்பாடு உத்தரவு அமுலில் இருந்த பொழுது, மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டம், தேனீயைச் சேர்ந்த அரண்மனைப்புதூர் கிராமம் திரு. குருநாதன் என்பவர் தமக்குச் சொந்தமான 34.45 குவிண்டால் எடையுள்ள 45 மூட்டை

7th March 1969]

கேப்பையை லாரி எண். எம். டி. ஆர். 2995 மூலம் தேனியிலிருந்து மதுரை நகருக்கு 21—4—1966-ம் தேதி அனுமதி இல்லாமல் கொண்டு சென்றார். 21—4—1966-ம் நாளன்று பெரியகுளம் வட்டமும் மதுரை வட்டமும் புஞ்சை தானியங்கள் போக்குவரத்து தடை செய்யப்பட்ட தனித்தனி பகுதிகளாகும். எனவே திரு. குருநாதன் பேரில் வழக்கு தொடரப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இது அன்றைய நிலை மட்டுமல்ல. இன்றைக்குக் கூட தேனியிலுள்ள கிராம விவசாயிகள் தங்களுடைய புஞ்சை தானியங்களைச் சுற்றுப் புறங்களிலும் மதுரையிலும் விற்க முடியாத நிலை தொடர்ந்து இருக்கிறது. விவசாயிகள் தங்களிடம் உள்ள சொந்தத் தானியங் களை, கட்டுப்பாட்டில் வராதவைகளை எங்கேயும் விற்பதற்குத் தடையில்லை என்று அறிவித்து, உத்தியோகஸ்தர்கள் விவசாயி களுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டாமென்று உத்தர விடுவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தடையில்லாத பகுதி யில் கொண்டு போவதற்குத் தடையில்லை.

Post of Director of Health Services

*149. *Q.*—Thiru N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the post of the Director of Health Services has been converted into the post of Additional Director of Health Services; and

(*b*) the reasons therefor?

சுகாதார இலாகா இயக்குனர் பதவி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சுகாதார இலாகா இயக்குனர் பதவி இணை இயக்குனர் (Additional Director) பதவியாக்கப்பட்டதா ?

(இ) இதற்குக் காரணமென்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) மருத்துவம், பொதுச் சுகாதாரத் துறைகளை ஒன்றாக இணைத்து சுகாதாரம் குடும்ப நலத்துறை ஒன்றைத் தனியாக அமைக்க வேண்டும் என்று அரசின் முடிவினையொட்டி, சுகாதாரம் குடும்ப நலத்துறை இயக்குனர், கூடுதல் இயக்குநர் பதவிகள் ஏற்படுத்தப் பட்டன. முன்னாள் மருத்துவத்துறை இயக்குனர், பொதுச் சுகாதாரத்துறை இயக்குனர் பதவி வகித்தவர்கள் இப்பதவி களுக்கு முறையே சுகாதாரம் குடும்பநலத்துறை இயக்குநராகவும்